International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

கூகை நாவலில் கரிசல் வட்டார மானுடவியல் பண்பாட்டுக் கூறுகள்

க. ராஜா
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை

ஆய்வுச் சுருக்கம்

கரிசல் வட்டாரம் என்பது தமிழ்நாட்டில் உள்ள ஒரு புவியியல் பகுதி. தமிழ்நாட்டின் தெற்கு பகுதியான ஒரு சில மாவட்டங்கள் இன்றளவும் கரிசல் பூமி என்று அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன. கரிசல் மண் நிறைந்த வட்டாரங்களான திருநெல்வேலி மாவட்டம், விருதுநகர் மாவட்டம் போன்றவை இவ்வழக்குகளுக்குள் அடங்கும். இப்பகுதிகளில் தோன்றிய கி. ராஜநாராயணன், பூமணி, சோ.தர்மன், பா.ஜெயப்பிரகாசம், கோணங்கி, தமிழ்ச்செல்வன், தேவதச்சன் முதலான எழுத்தாளர்கள் கரிசல் மண்ணுக்கு மேலும் பெருமை சேர்த்தவர்கள். கரிசல் மண்ணின் வாசனையையும், மக்களின் பழக்கவழக்கங்களையும், உணவு முறை, பேச்சு வழக்கு, தொழில், வாழ்க்கை இன்னல்கள், கலாச்சாரங்களை மக்களின் வாழ்வியலை தங்களது படைப்புகளின் மூலம் ஆழமாக பதிவு செய்துள்ளனர். அதன் அடிப்படையில் சோ.தர்மன் படைப்பில் உருவான கூகை என்னும் நாவலில் கரிசல் வட்டார மானுடவியல் பண்பாட்டுக் கூறுகள் குறித்து ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து குடும்பமாக, குடும்பங்கள் இணைந்து சமூகமாக வாழும் நாட்டில் மக்களின் வழிபாட்டு முறை, நம்பிக்கை, சடங்குகள், பிரிவினைகள், சாதியப் பாகுபாடுகள், ஆண் பெண் வாழும் நிலை, காதல், திருமணம், வட்டார வழக்குகள், சம்பிரதாயங்கள், அடக்குமுறைகள், அடிமையாக வாழும் நிலை, உழைப்புச் சுரண்டல்கள், பாலியல் வன்கொடுமைகள், போராட்ட குணம், கோபம், கொலை, களவு, வழக்குகள், காவல்துறை, அதிகாரத்தன்மை, பிற சமய ஊடுறுவல், படிப்பறிவு என ஒரு சமுதாயத்தின் ஒட்டுமொத்த அவல நிலையையும் கூறும் கூகை புதினத்தின் மானுடவியல் பண்பாட்டுக் கூறுகளை வெளிக்கொணரும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

முதன்மைச் சொற்கள்

மானுடவியல், பண்பாடு, கரிசல், சடங்குகள், நம்பிக்கைகள், இனவரைவியல், சிறுதெய்வ வழிபாடு

முன்னுரை

மானுடவியல் என்பது மனிதனைப் பற்றிய அறிவியல் என்னும் பொருள்படும். ஒரு மனிதன் தனது உணர்வு நிலையிலும், சமுதாய நிலையிலும், பண்பாட்டு நிலையிலும் அவனது செயல்கள், தீர்வு காணும் முறை என்னும் அடிப்படையில் ஆராயப்படுகிறது. மனிதனின் நடத்தை குறித்து வெளிப்படுவது மானுடவியல். மனதளவிலும் உடலளவிலும் வளம் நிறைந்த ஒருவன் சமுதாயத்திற்கோ, தனது குடும்பம் அல்லது உறவுகளுக்கோ அல்லது தனக்கோ ஒரு துன்பம், இன்னல், அவமானம் நேரும்போது துணிந்து அதை எதிர்த்து நிற்பான். தன்னை ஆதரிப்பவர்களோடு துணை நின்று அதை எதிர்த்து போரிடுவான். துணிவின்றி வாழும் மனிதன் தன்னை அடக்குபவர்களுக்கு பயந்து அடங்கி நடப்பான். அடிமையாக மாறிடுவான். மானுடவியல்

என்பது மனிதனின் நடத்தை குறித்தே மாறுபடும். இதனை உணர்ந்தவர்கள் சமுதாயத்தில் வாழும் பிறரை தனது செல்வம், புகழ் கொண்டு தனது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வர். இதனை உணர்ந்த சிலர் இம்முறையை மாற்றியமைக்க முயல்வர். ஒருவருடைய பலமும், பலவீனமும் அச்சமுதாயத்திற்கு பாதிப்பை உண்டாக்கக் கூடாது. இந்நிலை மாறப்பட, மாற்றப்பட வேண்டும் என்ற உறுதி பாடு கொண்டவர்கள் சமுதாய மக்களின் மானுடவியலை உலகிற்கு எடுத்துக்கூறி வந்துள்ளனர். அவர்களில் ஒருவரே சோ.தர்மன். தனது கூகை புதினத்தின் மூலம் கரிசல் நில மக்களின் மானுடவியலை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார். அதனைப் பற்றி விரிவாக இக்கட்டுரையில் காண்போம்.

இன பாகுபாடு

ஆரிய வருகைக்குப் பின்னர் தமிழகத்தில், இந்தியாவில் நால் வருண பாகுபாடு என்றும்,

> **கூலி யின்றியுஞ் சூத்திரக் கும்பலை**
> **வேலை வாங்கலாம் வேதிய ரேனெனில்**
> **வேலை செய்திட வேதியர்க் கேயிவர்**
> **ஞாலம் மீது பிறந்தனர் நாயனார்**[1]

கூலி கொடுக்காமல் சூத்திரர்களிடம் வேலை வாங்கலாம். பிறருக்கு வேலை செய்வதற்காகவே நாய் போன்று அடிமைகள் உலகில் பிறந்ததாகவே படைக்கப்பட்டு துன்புறுத்தியும் வந்துள்ளனர். பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பாகுபாடு நாம் அறிந்ததே. அத்தோடு நின்றபாடில்லை. அதற்குள்ளும் பல்வேறு கிளைகள் பாகுபாடுகள். தமிழகத்தில் தற்போது உலவிவரும் இனப் பெயர்களைக் கூற பட்டியல் போதாது. அவ்வாறு இருக்கையில் சோ.தர்மனின் கூகை புதினம் சூத்திரர் என பாகுபாடு கொண்ட அடிமை இனத்திலும் காணப்படும் பறையர், பள்ளர், சக்கிலிய மக்களின் மானுடவியல் குறித்து கூறுகிறது.

அனைத்து சாதிகாரர்களும் வாழும் ஊரான சித்திரம்பட்டியில் வாழும் பள்ளர், பறையர், சக்கிலியர்கள் பட்ட இன்னல்களே கூகை புதினம். கோவில்பட்டி களப்புக்கடையில் மேஜை யில் உட்கார்ந்து சாப்பிட்டதற்காக மூக்கனையும், முத்துக்கருப்பனையும் அடித்து காலால் உதைத்து துன்புறுத்தும் முத்தையா பாண்டியன் என்பவன் ஜமீனுக்கு வெறும் காவல் தொழில் செய்பவன். அதோடுமில்லாமல் சக்கிலியர் தெருவில் உள்ள சண்முகம்பகடையின் வீட்டிற்கு சென்று அவனை சாராயம் வாங்க அனுப்பிவிட்டு, சண்முகம் பகடையின் மனைவி கருப்பியுடன் கட்டாய உறவினை மேற்கொள்கிறான். இது அந்த தெருவிற்கும் ஏன் கருப்பியின் கணவன் சண்முகத்திற்கும் தெரிந்தும் கூட தங்கள் இன பெண்கள் அனைவரையும் சூறையாடுவதை அனைவரும் அறிந்திருந்தும் கூட எதிர்த்து கேள்வி கேட்க இயலாத நிலையில் இவ்வின மக்கள் வாழ்ந்தனர். காரணம் எதிர்த்து கேள்வி கேட்பவர்கள் அடித்தே கொல்லப்படுவார்கள். இறந்தவர்களின் பிணத்தை எடுத்து புதைப்பதற்கு கூட பாதிக்கப்பட்டவர்கள் தெருவோடு போய் அவர்களின் கால்களில் விழுந்து கெஞ்சி கூத்தாடிய பிறகு புதைக்க அனுமதி கொடுப்பார்கள்.

மன்னராட்சி முறையில் அரசனை எதிர்த்தவரோ அல்லது அவமதிப்பவரோ, எதிரிகளோ கொல்லப் படுவர். சாதிய ஆட்சி முறையில் பாதிக்கப் பட்டவர்கள்,

ஏஞ்சாமி ஒங்களுக்குப் பொண்டாட்டி புள்ளைக இல்லையா, நீங்க அக்கா தங்கச்சி கூட பொறக்கலையா? (கூகை,பக்-29) என்ற ஒற்றை கேள்விக்கே கொல்லப்படுவர். அதுவும் கேள்வியில் கூட தரக்குறைவான வார்த்தைகள் இருக்க வேண்டிய அவசியமில்லை. 'ஏஞ்சாமி' என்ற ஒற்றைச் சொல்லில் உள்ள ஏகாரமே தான் கொல்லப்படுவதற்கான காரணமாக இருந்தது. மேலும் கொலை செய்பவனும் மன்னனாக இருக்க வேண்டியதில்லை. மன்னன் வழிவந்த ஜமீனின் காவலாளியாகக் கூட இருக்கலாம். இதுவே கரிசல் மண் பற்றி கூறத் தொடங்கும் கூகை நாவலின் தொடக்கம்.

நீர் மேலாண்மை

சித்தரம்பட்டி மக்கள் வாழ கண்மாய் குளங்கள் கிணறுகள் இருந்த போதும், அவை அனைவருக்குமானதாய் இல்லை. மேலக்குடி ஜனங்களுக்கானதாய் மட்டுமே இருந்தது. தண்ணீர் இரைக்க அனுமதி இல்லை. மணிக் கணக்கில் மண்குடங்களுடன் தண்ணீருக்காக காத்துக்கிடந்தனர் இப்பெண்கள். மேலக்குடி பெண்களிடம்,

சாமியோவ் நீங்க இங்கிட்டு ரெண்டுவாளி ஊத்துங்க சாமி பச்ச புள்ளைய அழுகப் போட்டுட்டு வந்திருக்கேன் (கூகை, பக் -30)

என கெஞ்சி கூத்தாட வேண்டியிருந்தது. இரண்டு முழ உயர வாளியை உயரத் தூக்கி தண்ணீரை வைது கொண்டே ஊற்ற, இவர்கள் சத்தமில்லாமல் வாங்கிக் கொண்டு போக வேண்டிய நிலை. இந்நிலை இவ்வாறு நீடிக்கவில்லை. மானுடவியல் தோற்றம் பெற்றது. தங்களை அடிமைப்படுத்திய விலங்கை தானே உடைத்தெரிந்தனர். தன்னை பலவீனமாகவே கருதி அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின் வாழ்வில் நடராஜய்யர் விளக்கு அல்ல மாபெரும் காட்டுத்தீயை கொடுத்த தைரியம், மேலக்குடி

ஜனங்களை எதிர்க்கவும், அடிமை விலங்கை தகர்க்கவும், தங்களுக்குத் தேவையானதை தாங்களே செய்து கொள்ளவும் காரணமாக அமைந்தது. அவற்றுள் முதலானது குடிநீருக்கான கிணறு வெட்டியது.

**நீர்நிலை பெருகத் தட்டோர் அம்ம இவண்
தட்டோரே**

தள்ளா தோர் இவண் தள்ளா தோரே[2]

என புறநானூறும்,

குளம்தொட்டு கோடு பதித்து வழிசீத்து[3]

நீர்நிலைகள் கட்டி நீரைத்தேக்கியதைப் போல பள்ளர் இன மக்களும்,

எங்கள் ரத்தம் படாத கிணறுகள் உண்டா? எங்கள் வேர்வை படாத தண்ணீர் உண்டா? அப்படி வெட்டிய கிணறுகளில் நாங்கள் வெளியே நின்று கையேந்தி தண்ணீர் குடித்துத்தாகம் தீர்த்தோம். தீட்டு பட்ட தண்ணீர், தீண்டியது எங்கள் கைகள். புனிதமானது எப்படி? பொங்கியது ஊற்று? ஆனந்த கூத்தாடினார்கள். அள்ளி அள்ளிப் பருகினார்கள். அதிசயம் என்றார்கள். முதன்முறையாக பள்ளப் பெண்கள் கிணறுகளில் வாளி கொண்டு தண்ணீர் இறைத்து பழகிப் பானை நிரப்பினார்கள் (கூகை, பக்–96,97)

கல்வி

கல்வி குறித்தும் கற்றோர் குறித்தும் தொல்காப்பியம் தொட்டு இன்றளவு வரை கூறாத நூல்களே இல்லை.

பிச்சை புகினும் கற்றல் நன்றே[4]

என வழங்கிய நாம் கல்விக்காக பல்வேறு மாநிலங்களுக்கும், நாடுகளுக்கும் கூட சென்று கல்வி கற்கத் தொடங்கிய 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் கிராமப்புறங்களில் வாழ்ந்த மக்களுக்கு கல்வி என்பது பற்றிய எவ்வித சிந்தனையும் இன்றி அடிமையாக்க பட்டிருந்தனர்.

நடராஜய்யர் பள்ளக்குடி ஜனங்களை கூப்பிட்டு எல்லோருக்கும் தன்னோட நிலத்த பிரிச்சு கொடுத்து பத்திரத்தில் கையெழுத்து போடச் சொல்ல யாருக்கும் கையெழுத்து போடத் தெரியாததனால் கைநாட்டு வைக்க... ஏன் எதற்கு என்று கூட கேட்காமல் சனங்கள் கைநாட்டு வைப்பதைக் கண்டு படிப்பறிவு இல்லாததை மக்களுக்கு தெளிவுபடுத்தினார்.

வெள்ளாமை விளைந்து பின் விவசாயம் செய்ய நான்கு ஜோடி மாடுகளை வாங்க வேண்டும் என நடராஜய்யர் கூற, வண்டி மாடு வாங்கும் ஆசையில் எல்லோரும் அலைந்தார்கள்.

செம்பட்டையனும், ராக்கனும் கிட்டினதேவரு மாட்டைப் பார்த்து விலை பேசி விட்டு வந்தார்கள். **ஆறுநூறெல்லாம் தர முடியாது, ஒரே வேலைதான் தொள்ளாயிரம்னா குடுங்க** (கூகை,பக் -112) என அறநூறு ரூபாய் மாட்டை 900 ரூபாய்க்கு விலைக்கு கேட்டனர். மக்களுக்கு கல்வியறிவு இல்லாத நிலை இங்கு வெளிப் படுகிறது. இந்நிலை இப்படியே நீடிக்கவில்லை. தனது பலம், பலவீனம் அறிந்த மனிதன் தனது பலவீனத்தை சரி செய்ய முயற்சி செய்வான். அந்தச் செயலே இங்கு கல்வியறிவு. அதையே அடுத்த ஆயுதமாக இம்மக்கள் கையிலெடுத்தனர்.

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே[5]

என்பதை உணர்ந்த மக்கள் தங்கள் இன அடுத்த தலைமுறையினர்,

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர்[6]

என்பதை உணர்ந்திருந்தனர்.

'இப்ப ரெண்டு பயங்க சைக்கிள் வேற வாங்கிட்டான். நாலு பயலுக கோவில்பட்டி பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போறான்' என காலத்திற்கு ஏற்ப தங்களுக்கு வழங்க மறுத்த பிற உரிமைகளை தானே அடைய முயற்சிகள் செய்தனர் இம்மக்கள்.

சிறுதெய்வ வழிபாடு

கூகை புதினம் முழுவதிலும் ஒருவகையான சிறு தெய்வ வழிபாட்டினை காண முடிகிறது. பெரும்பாலும் தன் இனத்திற்கு உதவியவர்கள், வாழ வழி செய்தவர்கள் இவர்களையே தலைமுறை தலைமுறையாக சிறு தெய்வமாக, குலதெய்வமாக வழிபடும் வழக்கம் தமிழக மக்களிடையே நிலவியது. இப்புதினத்தில் வரும் முக்கிய பாத்திரப்படைப்பான சீனிக்கிழவன் கூகை எனப்படும் ஆந்தையை வழிபட்டு வருகிறான். பொதுவாக பிற பறவை இனங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட இனம் கூகை. பகலில் கண் தெரியாமல் அமைதியாகவும், காகம், மைனா, கரிச்சான், குருவி போன்ற சிறு சிறு பறவைகளும் காயப்படுத்தும் போதும் எதிர்த்து சண்டையிடாமல் காயப்பட்டு கொண்டிருக்கும். இரவில் மட்டுமே கூர்மையான பார்வையுடன் வேட்டையாடும். மனிதனைப் போன்றே வட்டமான முகமும் வளைந்த மூக்கும் கொண்டது. கூகையை எவனாச்சும் கும்பிடுவானான்னு அத்தனை பேரும் கேலி பண்ணும் போதும் பல்லக்குடிச்சனம் தலைமுறை தலைமுறையா கும்பிட்டு வணங்கி வந்தது. அதில் சீனிக்கிழவனும் ஒருவன். தான் கூகையை வழிபடுவதற்கான காரணமும் சீனிக்கிழவனிடம் இருந்தது. சீதேவியை வீட்டிற்குள் கூகையை

அழைத்து வந்ததாகவும் கூகையின் கூற்றுப்படியே தனது சொந்த ஊரை விட்டு இடம்பெயர்ந்து சித்திரம்பட்டி வந்து சேர்ந்ததாகவும், தற்போது மக்கள் அடிமையில் இருந்து வெளிப்பட்டு வாழ கூகைச்சாமியை காரணம் என்றும் மக்கள் நம்பினர். பள்ளர் இன மக்கள் கூகைச்சாமி கோவிலுக்கு பொங்கல் இட்டார்கள். தங்களது வயல்களில் பெரிய பெரிய புழுக்கள் வந்து பயிர்களைஉண்டு நாசம் செய்த போது கூகைச்சாமிக்கு பொங்கல் இட்டு அழுதார்கள். தனது இன்ப துன்பங்கள் அனைத்திற்கும் கூகைச் சாமியிடம் தஞ்சமடைந்தார்கள். அதற்கான பலனும் அவர்களுக்கு கிடைத்தது. கூகைச்சாமி கோயில் இடிக்கணும்னு மக்கள் பேசும் போது 'கூகச்சாமி மாதிரி சாந்தமான சாமி எதுவுமே கெடையாது, சொல்லப்போனா அது ஒரு ஊமச்சாமி, தன்னோட வலியையும் வேதனையையும் துக்கத்தையும் துயரத்தையும் தனக்குள்ளேயே அடக்கிட்டு வாழ கற்றுக் கொடுக்கிற சாமி தான் ஊமச்சாமிங்கிற கூகச்சாமி என தனது நம்பிக்கையை சீனிக் கிழவன் எடுத்துரைத்தான்.

மக்கள் தங்களது நம்பிக்கையில் உறுதியாய் இருந்தனர். இன்றளவும் கூகைச் சத்தம் சகுனம் கூறுவதாக நம்பப்படுகிறது. கூகையின் அலறல்,

ஓருரை உரைக்குமாகில் உற்றதோர் சாவு சொல்லும்

ஈருரையுரைக்குமாகில் எண்ணிய கருமம் ஈடேறும்

மூவுரை யுரைக்குமாகில் மோகமாய் மங்கை சேர்வாள்

நாலுரை உரைக்குமாகில் நாழியில் கலகம் வந்திரும்

ஐயுரையுரைக்குமாகில் ஒரு பயணம் கிட்டும்

ஆருரை யுரைக்குமாகில் அடுத்தவர் வரவு கூறும்

ஏழரை யுரைக்குமாகில் இழந்த பொருள்கள் மீளும்

என்முறை உரையுறைக்குமாகில் திட்டென சாவு நேரம்

ஒன்பதும் பத்தும் உத்தமம் மிகவே நன்று

(கூகை,பக் - 253)

இவ்வாறாக கூகையின் சத்தத்தைக் கொண்டு வருங்காலம் கூறும் நம்பிக்கை இன்றும் மக்களிடையே நிலவி வருகிறது.

முடிவுரை

மனித இனம் அதன் சமூகங்கள், கலாச்சாரங்கள், வரலாறு, பரிணாம வளர்ச்சி, மொழி, கலை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் போன்றவற்றை மையமாகக் கொண்டு குறிப்பிட்ட இன மக்களின் வாழ்வியலை சோ.தர்மன் கூகை புதினத்தின் வழி உலகிற்கு எடுத்துரைத்துள்ளார். இன்றளவும் பல்வேறு கட்டுப்பாடுகள் நிறைந்ததாக சாதிய அடக்குமுறைகளுக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் மக்கள் தானாகவே அடிமை விலங்கை உடை தெரியவும் பிற இனத்தவர் தங்களது பிறப்பின் காரணமாக தாம் உயர்ந்தவர் என்ற மனநிலையினை துறந்து அனைவருக்கும் அனைத்தும் வேண்டும் என்ற பரந்த மனப்போக்கு வளரச் செய்தல் வேண்டும் என்பதன் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அடிக்குறிப்பு

1. இராவண காவியம், விந்தக் காண்டம், ஆரிய படலம், பா -28
2. புறம் - 18
3. சிறுபஞ்சமூலம் - 66
4. அதிவீரராம பாண்டியர், வெற்றி வெற்றி வேற்கை, பா - 35
5. புறம் - 183
6. குறள் - 410

துணைநூற்பட்டியல்

1. சோ.தர்மன், கூகை, அடையாளம் பதிப்பகம், திருச்சி மாவட்டம், முதல் பதிப்பு -2017.
2. புலியூர்க்கேசிகன், திருக்குறள் புதிய உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 27ஆம் பதிப்பு, பிப்ரவரி, 2010
3. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2010
4. வெற்றியழகன்.ந, புலவர் குழந்தையின் இராவணகாவியம், சாரதா பதிப்பகம், சென்னை, 10ஆம் பதிப்பு, டிசம்பர் 2010
5. வித்வான் பு.சி.புன்னைவனநாதன், சைவசிந்தா நூற்பதிப்புக் கழகம், சென்னை சூலை 1982
6. அதிவீரராமபாண்டியன், வெற்றிவேற்கை (ஆர்.கணபதி & கம்பெனி) பெரம்பூர், சென்னை. மூன்றாம் பதிப்பு 1919.